**செய்தி வெளியீடு எண்: 1454** **நாள்: 24.08.2022**

**விவசாயிகளுடன் 2022–23 ஆம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்**
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் நடைபெற்றது.**

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் தலைமையில் இன்று (24.08.2022) சேப்பாக்கம், வேளாண்மை இயக்குநர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகளுடன் 2022–23ஆம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதுதில்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ்.விஜயன், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., வேளாண் உற்பத்தி ஆணையர் / அரசுச் செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., கூட்டுறவு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., அரசு அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வேளாண்மைத் துறை சாதனை – தமிழ்நாட்டில் உச்சம் தொட்ட நெல் உற்பத்தி:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்றவுடன் வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், வருமானத்தைப் பெருக்கவும் வேளாண்மைக்கென தனி நிதி நிலை அறிக்கையை வழங்கி, பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டமிட்ட சீர்மிகு செயல்பாட்டினால், கடந்த 22 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 2021–22இல், 22.05 இலட்சம் எக்டர் பரப்பளவில் நெல்சாகுபடி செய்யப்பட்டு, 122.22 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு சாதனை அடையப்பட்டுள்ளது.

உரிய காலத்தில் பாசனத்திற்காக மேட்டூர் அணை திறக்கப்பட்டதாலும், கால்வாய்கள் மற்றும் ஏரிகளை முன்னேற்பாடாக தூர் வாரப்பட்டதும், டெல்டா மாவட்ட விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் ரூ.61 கோடியில் **"குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம்"** செயல்படுத்தப்பட்டதும், 14,84,052 விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக ரூபாய் 10,292 கோடி வழங்கப்பட்டதாலும், விவசாயிகளின் தீவிர பங்கேற்பினாலும் மட்டுமே வரலாற்றுச் சிறப்புமிக்க இச்சாதனை அடையப்பட்டது.

விவசாயிகள் உற்பத்தி செய்த நெல் மணிகளை காலத்தே கொள்முதல் செய்யப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக 42.55 இலட்சம் மெ.டன் கடந்த குறுவைப் பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், கடந்த 46 ஆண்டுகளில் இல்லாத சாதனையாக முந்தைய ஆண்டுகளின் சாதனையையும் விஞ்சி, நடப்பாண்டில் டெல்டா மாவட்டங்களில் 5.28 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதற்கு, டெல்டா மாவட்டங்களில் பெறப்பட்ட மழையும், பாசனத்திற்காக எப்போதும் இல்லாத வகையில் 19 நாட்களுக்கு முன் கூட்டியே, மே மாதம் 24 தேதி மேட்டூர் அணையில் நீர் திறக்கப்பட்டதும், இதனை எதிர்நோக்கி அரசின் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக A மற்றும் B கால்வாய்கள் 5000 கி.மீ. நீளத்திற்கு, ரூ.90 கோடி செலவில் தூர் வாரப்பட்டதும், முன்பு எப்போதும் நிகழாத விதமாக 1500 கி.மீ. நீளத்திற்கு C மற்றும் D வாய்க்கால்கள் தூர் வாரப்பட்டதும், பாசன நீர் கடைமடை வரை சென்றடைந்ததற்கு முக்கிய காரணங்களாகும்.

கடந்த ஆண்டு, விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டது போல, நடப்பாண்டிலும் 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது. குறுவை சாகுபடியை ஊக்குவித்திடும் வகையில் 3,18,201 விவசாயிகளுக்கு 2,432 கோடி ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு குறுவை பருவத்தில் டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடியை ஊக்கப்படுத்தும் வகையில், ரூ.61 கோடியில் **"குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம்"** செயல்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 8550 மெ.டன். யூரியா, 9500 மெ.டன். டி.ஏ.பி மற்றும் 4750 மெ.டன். பொட்டாஷ் உரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் ஒரு ஏக்கருக்கு இலவசமாக வழங்கப்பட்ட உரங்களின் மதிப்பு **ரூ.2,466.50** ஆகும். மேலும், 2400 மெ.டன். தரமான நெல்விதைகளையும் உரிய காலத்தில் இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

வேளாண் பொறியியல் துறை மூலம் விசை உழுவை இயந்திரங்கள், தானியங்கி நடவு இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், விசைகளை எடுக்கும் கருவி மற்றும் வைக்கோல்கட்டும் கருவி ஆகியவை 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3.37 இலட்சம் பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பான வழிகாட்டுதலாலும், முன்னேற்பாட்டு நடவடிக்கைகளினாலும், நடப்பாண்டிலும் நெல் உற்பத்தியில் சாதனை தொடர்ந்திட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும், வரலாறு காணாத வகையில் கார் / குறுவை / சொர்ணவாரிப் பருவங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள 10.22 இலட்சம் ஏக்கர் பரப்பிலிருந்து உற்பத்தி செய்யப்படும் நெல்மணிகள், மாண்புமிகு முதலமைச்சரின் தொலை நோக்குப் பார்வையின்

காரணமாக வரும், 01.09.2022 முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்ய உரிய, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ள பல்வேறு வேளாண் சார்ந்த திட்டங்களை உழவன் செயலி மூலமாகவோ / வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாகவோ பெற்று பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in